முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1334

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.05.2023**, வியாழக்கிழமை

1. ஞானவேலியிட்டு உலக மக்களை
ஞானிகள் ஆக்குவேன் என அவதாரம் எடுத்து
வானவர்கள் மெச்ச தர்மத்தை கையிலெடுத்து
வையகத்தின் பசிப்பிணி விரட்டுகின்ற அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது விடை திங்கள் உரைப்பேன்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 11 ம் நாள், 25.05.2023, வியாழக்கிழமை)
அரங்கனே கலியின் சிறந்த ஞானி
3. அரங்கன் மார்க்கமே கலியினில் இடர்களை வெல்லும் மார்க்கம்
மார்க்கம் தனை உலகோர் மனமுவந்து ஏற்று
மரணம் வெல்ல வாய்ப்புத் தா என
4. உறுதிகொண்டு அரங்கன் திருவடி பற்றி
உலகோர் சரணாகதி கொண்டுவிட
கொண்டுவிட ஆறுமுகன் என்னருள்
குறைவின்றி அவர்கட்கெல்லாம் ஞானமாக
5. உண்டாகி பாதுகாப்புப் பெருகி
உலகினில் அனைவரும் மரணம் வெல்வர்
உயர்வான ஞானம் தேறி கலியுகத்தில்
அரங்கன் விரும்புகின்ற ஞான உலகம் தன்னை விரைந்து படைத்து
6. இந்த பேருலகை பேரிடர்
பிரளையம் பிற துன்பத்திலிருந்து
பெரும்பாதுகாப்புத் தந்து
காத்து அருள் புரிவர்
7. அருளாகஅறமாக அனைத்துமாக
அரங்கன் அற்புதம் கலியினில் நடத்திவர
வரமபெற உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி வரவேண்டும்
வணங்கி அரங்கன் திருவடி பற்றவேண்டும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—